# பி.எட். சிறப்புக் கல்வி

தமிழ் மற்றும் ஆங்கிலம் பயிற்று மொழி

(தொலைநிலை முறை)

# Bachelor of Education in Special Education (B.Ed. SE)

Tamil and English Medium

(Distance Mode)

## விண்ணப்பப் படிவம் மற்றும் விளக்கக் கையேடு

## Application Form and Prospectus

## 2011 - 2013

# தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்

# TAMILNADU OPEN UNIVERSITY

577, ANNA SALAI, SAIDAPET, CHENNAI 600 015

www.tnou.ac.in

# B.Ed. Special Education Entrance Examination & Admission for 2011 - 2013

## முக்கிய தேதிகள் (தற்காலிகம்)

## Important Dates (Tentative)

| | |
|---|---|
| விண்ணப்பப் படிவம் வினியோகத்திற்கான தொடக்க நாள்<br>**Issue of Application & Prospectus** | 17.08.2011 |
| விண்ணப்பப் படிவம் வினியோகத்திற்கான கடைசி நாள்<br>**Last Date for Issue of Application & Prospectus** | 19.09.2011 |
| பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள்<br>**Last Date for the Submission of Filled-in Application Forms to TNOU's Office** | 19.09.2011<br>(மாலை 5 மணி வரை) |
| நுழைவுத் தேர்வு நாள்<br>**Date of Entrance Examination** | 09.10.2011 |
| தேர்வு முடிவு அறிவிப்பு நாள்<br>**Announcement of Results** | 21.10.2011 |
| பி.எட். சிறப்புக் கல்விச் சேர்க்கைக்கான கலந்தாய்வு நாட்கள்<br>**Admission Counselling for B.Ed. SE Candidates of Both Tamil & English Medium** | 07.11.2011 &<br>08.11.2011 |
| பி.எட். சிறப்புக் கல்வி வகுப்புகள் தொடக்கம்<br>**B.Ed. SE Induction Programme** | ஜனவரி, 2012 |

# 1 தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் - ஓர் அறிமுகம்

## 1.1 முன்னோட்டம்

தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் தமிழகத்தின் முதல் திறந்தநிலைப் பல்கலைக்கழகமாக 2002 ஆம் ஆண்டு தமிழக சட்டமன்றத்தில் சட்டம் இயற்றப்பட்டு உருவாக்கப்பட்டது. இப்பல்கலைக்கழகம் பல்கலைக்கழக மானியக்குழு (UGC), தொலைநிலைக் கல்வி மன்றம் (DEC), தேசிய ஆசிரியர் கல்வி மன்றம் (NCTE), இந்திய மறுவாழ்வுக் கழகம் (RCI) போன்ற இந்திய உயர்நிலை மன்றங்களின் ஒப்புதலைப் பெற்றுள்ளது.

101 படிப்புகள், 143 கல்வி மையங்கள், 141 சமுதாயக் கல்லூரிகள், 155 கணினிப் பயிற்சி மையங்கள், 10 பி.எட். படிப்பு மையங்கள், 11 பி.எட். சிறப்புக் கல்வி படிப்பு மையங்கள், வெளி மாநிலங்களில் 29 கல்வி மையங்கள், 11 பல்கலைக்கழக ஒருங்கிணைப்பு மையங்கள், 3.4 லட்சம் மாணவர்கள் என்று தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் கல்விப் பணிகள் விரிந்து பரந்த நிலையில் உள்ளன. இந்தியளவிலான தொலைநிலைக் கல்வி முறையில் படிப்புகளை வழங்கும் நிறுவனங்களில் இப்பல்கலைக்கழகம் தரவரிசையில் 10-ஆம் இடத்தைப் பெற்று ஒரு 'மெகா' பல்கலைக்கழகம் என்ற நிலையை எட்டியுள்ளது.

இப்பல்கலைக்கழகம் மே 2011 ஆம் ஆண்டு முதல் சென்னை சைதாப்பேட்டையில் உள்ள பொலிவோடு ஓங்கி நிற்கும் புதிய கட்டிடத்தில் இயங்கி வருகிறது. இப்பல்கலைக்கழகமானது, 24 பேராசிரியர்கள், 46 அலுவலகப் பணியாளர்கள், இவர்களுடன் 100 வெளி ஆதாரப் பணியாளர்கள் போன்றோர்களைக் கொண்டு திறம்பட கல்விப் பணி ஆற்றி வருகிறது. இங்கு 14 புலங்களும், 7 பிரிவுகளும் அமைக்கப்பட்டு பல்வேறு படிப்புகளுக்கு ஆதாரமாக விளங்குகின்றன. பல்கலைக்கழகத்தின் ஆட்சிமன்றக்குழு, கல்விக்குழு, நிதிக்குழு போன்றவைகள் பல்கலைக்கழக வளர்ச்சியின் அங்கமாகத் திகழ்கின்றன.

---

**பி.எட். சிறப்புக் கல்வி விண்ணப்பப்படிவம் பூர்த்தி செய்ய இவ்விளக்கக் கையேட்டை முழுமையாகப் படிப்பது அவசியம் ஆகும்.**

---

## 1.2 பல்கலைக்கழகத்தின் குறிக்கோள்கள்

பல்கலைக்கழகத்தின் முதன்மை குறிக்கோள்களாவன:

- உயர் கல்வி பெற விரும்புபவர்களுக்கு முறைசாரா மற்றும் மாற்றுக்கல்வியை குறைந்த செலவில் பயன் பெறும் வழியில் அளித்தல்.
- உயர் கல்வி அளித்திடும் மரபு வழி பல்கலைக்கழக முறையின் முயற்சிகளுக்கு ஈடு கொடுத்தல் மற்றும் அவற்றின் தாக்கத்தைக் குறைத்தல்.
- அவரவருடைய சொந்தக் காரணங்களுக்காக முறைசார் கல்வியைத் தொடர முடியாமல் விடுபட்டவர்களுக்கு மறுவாய்ப்பு அளித்தல்.

- பொதுவாக, நல்ல தரமுள்ள உயர்கல்வியை அனைவரும் சுலபமாக அடைய உதவுதல். குறிப்பாக, நலிவுற்ற பிரிவினருக்கு அவர்களது வாயிற்படிக்கே சென்று கல்வியை அளித்தல்.
- அவரவர் விருப்பப்பட்ட நேரத்தில் தங்களுடைய தொழில்சார் / பணி சார் தேவைகளை நிறைவேற்றும் வகையில் தங்களுடைய அறிவையும் திறன்களையும் வளர்த்துக் கொள்ள மாணவர்களுக்கு வாய்ப்பு அளித்தல்.
- எதைப் படிப்பது? எப்பொழுது படிப்பது? எப்படி படிப்பது? என்பதன் அடிப்படையிலும் நுழைவுத் தகுதிகள் அடிப்படையிலும் வளைந்து கொடுக்கக்கூடிய நல்ல தரமுள்ள பல்கலைக்கழகக் கல்வியை பயிற்றுவிப்பதற்கு புதிய முறைகளை வடிவமைத்தல்.
- குறிப்பிட்ட வேலை வாய்ப்பு அளிக்கக்கூடிய பாடத்திட்டங்களை வடிவமைத்து வழங்குதல்.

### 1.3 பல்கலைக்கழக புலங்கள்

தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தில் பல்துறைப் படிப்புகளுக்கான பதினான்கு புலங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. அவைகள்:

- கணினி அறிவியல் புலம்
- தொடர்கல்விப் புலம்
- கல்வியியல் புலம்
- சுகாதார அறிவியல் புலம்
- இலக்கியப் புலம்
- மேலாண்மையியல் புலம்
- அறிவியல் புலம்
- சமூக அறிவியல் புலம்
- தமிழியல் மற்றும் பண்பாட்டுப் புலம்
- அரசியல் மற்றும் பொது நிர்வாகவியல் புலம்
- இதழியல் மற்றும் புதிய ஊடகப் படிப்புகளுக்கான புலம்
- சிறப்புக் கல்வியியல் மற்றும் மறுவாழ்வுப் புலம்
- குற்றவியல் மற்றும் மனித உரிமைப் புலம்
- வரலாறு மற்றும் சுற்றுலாவியல் புலம்

## 2 இந்திய மறுவாழ்வுக் கழகம் (Rehabilitation Council of India)

இந்திய மறுவாழ்வுக் கழகம் 1992 ஆம் ஆண்டு இந்தியப் பாராளுமன்றத்தில் இயற்றப்பட்ட சிறப்புச் சட்டத்தின் மூலம், சமூக நீதி மற்றும் மேம்பாட்டு அமைச்சகத்தினால் உருவாக்கப்பட்ட சட்டப்பூர்வ அமைப்பு ஆகும். இவ்வமைப்பிற்கு, மாற்றுத் திறனாளிகளின் வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும்

16 வகையான மறுவாழ்வு வல்லுனர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சிகளைத் திட்டமிடல், உருவாக்குதல், தரத்தை மேம்படுத்துதல், தரச்சீரமைத்தல் போன்ற பொறுப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. இச்சட்டம் 2001 ஆம் ஆண்டு திருத்தப்பட்டு, இந்திய மறுவாழ்வுக் கழகத்தின் பொறுப்புக்கள் விரிவுபடுத்தப்பட்டுப் பின்வரும் பணிகள் சேர்க்கப்பட்டன:

- ♦ மாற்றுத் திறனாளிகளின் சிறப்புக் கல்வி மற்றும் மறுவாழ்வுக்குத் தேவையான வல்லுனர்களுக்கு வழங்கப்படும் பயிற்சியின் தரத்தைச் சீராக்குதல்.
- ♦ சிறப்புக் கல்வி மற்றும் மறுவாழ்வுத் துறையில் வழங்கப்படும் பயிற்சித் திட்டங்கள், அவற்றின் தரம் மற்றும் கொள்கைகளைக் கட்டுப்படுத்துதல்.
- ♦ மறுவாழ்வு வல்லுநர்களுக்குப் பயிற்சி வழங்கும் கல்வி நிலையங்கள்/அமைப்புக்கள் பல்கலைக்கழகங்களை அங்கீகரித்தல் மற்றும் அவற்றைக் கண்காணித்தல்.
- ♦ சிறப்புக் கல்வி மற்றும் மறுவாழ்வுத் துறையில் உள்ள தேர்ச்சி பெற்ற வல்லுனர்களைப் பற்றிய “மத்திய மறுவாழ்வுப் பணியாளர் பேரேட்டினைப் பராமரித்தல்.”

இந்திய மறுவாழ்வுக் கழகச் சட்டம் 13ஆம் விதியின் படி, மறுவாழ்வுத் துறையில் அங்கீகரிக்கப்பட்ட கல்வித் தகுதி பெற்று, மத்திய மறுவாழ்வுப் பணியாளர் பேரேட்டில் பதிவு செய்த மறுவாழ்வு வல்லுனர்கள் மட்டுமே பின்வரும் பணிகளில் ஈடுபடலாம்:

1. மத்திய அரசாங்க அலுவலகங்கள் மற்றும் உள்ளூர் ஆணையங்களால் நடத்தப்படும் கல்வி நிறுவனங்களில் மறுவாழ்வு வல்லுனர் மற்றும் தொடர்புடைய பிற பதவிகளை வகித்தல்.
2. இந்தியாவின் எந்த இடத்திலும் மறுவாழ்வு வல்லுனராகப் பணிபுரிதல்.
3. மறுவாழ்வு வல்லுனரால் சான்றொப்பமிடப்பட/உறுதியளிக்கப்பட வேண்டிய சட்டப்பூர்வமான சான்றிதழ்களில் கையொப்பமிடுதல்/உறுதியளித்தல்.
4. இந்திய சாட்சிச் சட்டம் 1872, விதி 45 இன் படி மாற்றுத் திறனாளிகள் தொடர்புடைய விசயங்களில் வல்லுனர் என்ற முறையில் நீதிமன்றங்களில் ஆதாரங்களை அளித்தல்.

**இந்திய மறுவாழ்வு கழகத்திற்கும் மற்றும் தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்திற்கும் இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம்**

இந்திய மறுவாழ்வுக் கழகம் மற்றும் தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் 2006 ஆம் ஆண்டு ஜுலை மாதம் இந்திய மறுவாழ்வுக் கழகத்துடன் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்திய மறுவாழ்வுக் கழகத்துடன் இணைந்து தேவை அடிப்படையிலான சிறப்புக் கல்விப் பாடங்களைத் தொலைநிலைக் கல்வி வாயிலாக அளித்து வருகிறது.

## 3 சிறப்புக் கல்வி மற்றும் மறுவாழ்வுப் புலம்
## (School of Special Education and Rehabilitation)

தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் கல்விக்குழு 22.10.2009 நாளன்று புதிய கல்விப் புலமாகிய “சிறப்புக் கல்வி மற்றும் மறுவாழ்வுப் புலம்” உருவாதலை அங்கீகரித்தது. இப்புதிய புலத்திற்கு ஆட்சி மன்றக்குழுவும் 23.10.2009 அன்று ஒப்புதல் வழங்கியது. பல்கலைக்கழகத்தின் புதிய வளாகம் சென்னை சைதாப்பேட்டையில் துவங்கியவுடன், இப்புதிய புலமானது மே 18, 2011 அன்று முதல் செயல்படத்துவங்கியுள்ளது.

சிறப்புக் கல்வி மற்றும் மறுவாழ்வுப் புலத்தின் மூலம் தற்சமயம் இந்திய மறுவாழ்வுக் கழகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பி.எட். சிறப்புக் கல்வி வழங்கப்படுகிறது.

**சிறப்புக் கல்வி மற்றும் மறுவாழ்வுப் புலம்** கீழ்க்காணும் பரந்த குறிக்கோள்களைக் கொண்டுள்ளது.

- ♦ சிறப்புக் கல்வி மற்றும் மறுவாழ்வு தொடர்பான படிப்புகளைத் தொலைநிலைக் கல்வி மூலம் வழங்குதல்.
- ♦ மாற்றுத் திறனாளிகள் தொடர்பான படிப்புகளில் மனித வள மேம்பாட்டினை மேம்படுத்தி கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சியில் ஈடுபடச் செய்தல்.
- ♦ ஊனமுற்றோர்களின் திறன்களையும் தொழிற்சார் மறுவாழ்வு செயல்களையும் ஊக்குவிக்கும் வண்ணம் படிப்புகளை வழங்குதல்.
- ♦ ஊனமுற்றோர் தொடர்பான கல்வி, கற்பித்தல், ஆராய்ச்சி போன்றவைகள் சார்ந்த அறிவுப்பட்டறை, கருத்தரங்கங்கள் நடத்துதல்.
- ♦ ஊனமுற்றோர் குறித்த கட்டுரைகள், ஆய்வறிக்கைகள் போன்றவற்றை வெளியிடுதல்.

.

## 4 இளநிலைக் கல்வியியல் சிறப்புக் கல்வி (B.Ed.SE)

### 4.1 படிப்பிற்கான விண்ணப்படிவம், விளக்கக் கையேடு வெளியீடு

இவ்விண்ணப்பப் படிவம் மற்றும் விளக்கக் கையேடு 2011-2013 ஆம் ஆண்டிற்காக வெளியிடப்படுகிறது. விண்ணப்பப்படிவம் விற்பனை மற்றும் பிற செயல்பாடுகள், நுழைவுத்தேர்வு நடத்துதல், முடிவுகள் வெளியீடு மற்றும் மாணவர் சேர்க்கை போன்றவை டிசம்பர் 2011 வரை நடைபெறுகின்றன. பாடவகுப்புக்கள் ஜனவரி 2012 இல் தொடங்கி, டிசம்பர் 2013 இல் நிறைவு பெறுகின்றன.

This prospectus is released for the Batch 2011-2013. Application sale and processing, entrance examination conduction, result publication and admission would be done until December 2011. The programme of study starts from January 2012 and ends at December 2013.

## 4.2 பி.எட். சிறப்புக் கல்வி வழங்குதலின் நோக்கங்கள்

- சிறப்புத் தேவை குழந்தைகளின் கல்வியை மேம்படுத்துவதன் மூலம் நாட்டின் வளர்ச்சிப் பணியில் பங்கேற்கச் செய்தல்.
- குறைபாடு உடைய மாணவர்களின் திறமைகள், திறன்கள், தன்னம்பிக்கை ஆகியவற்றினை வளர்த்து சமூகத்தில் சிறந்த சுயமரியாதை, கௌரவம் மற்றும் சுதந்திரம் கொண்ட குடிமக்களாக அவர்களை உருவாக்குதல்.
- பி.எட். பயிற்சியின் மூலம் ஆசிரியர்கள் சிறப்புப் பள்ளிகள், ஒருங்கிணைந்தக் கல்வித்திட்டம், உள்ளடங்கிய கல்வி முறை போன்றவற்றில் பணி செய்வதற்கு வாய்ப்பை ஏற்படுத்துதல்.
- கற்றல் அனுபவங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் தேர்ந்தெடுப்பதற்கான திறன்களையும் வளர்த்தல்.
- குழந்தைகளின் வளர்ச்சி, தேவைகள், இயல்புகள் மற்றும் கற்றல் செயல்பாடுகளைப் புரிந்து, உதவி மற்றும் ஆலோசனைகளை வழங்குதல்.
- குழந்தைகளின் தனிப்பட்ட பிரச்சினைகள் மற்றும் கல்விசார் பிரச்சினைகளை கையாளும் திறன்களை வளர்த்தல்.
- பல்வேறு கற்பித்தல் முறைகள், தொழில்நுட்பம் பயன்பாடு மற்றும் மதிப்பிடுதல் நுட்பங்கள் போன்றவற்றில் பயிற்சி பெறுதல்.
- பல்வேறு இணை கலைத்திட்டம் மற்றும் கலைத்திட்டம் சாரா செயல்பாடுகளை ஒருங்கிணைப்பதற்கான திறன்களை வளர்த்துக்கொள்ளுதல்.
- சிறப்புத் தேவை மாணாக்கர்களை சமுதாயத்தில் ஓர் அங்கமாகவும், சமுதாயத்திற்கு தங்கள் பங்களிப்பை அளிப்பவர்களாகவும் உருவாக்குதல்.

## 4.3 படிப்புக் கால அளவு (Duration of the Programme)

பி.எட். சிறப்புக் கல்வி பட்ட படிப்புகளுக்கு கால அளவு (தொலைநிலை மூலம்) இரண்டு ஆண்டுகள் ஆகும். எனினும் ஒரு மாணவ - ஆசிரியர் அதிக பட்சமாக நான்கு ஆண்டுகள் வரை அவகாசம் எடுத்துக் கொள்ளலாம்.

B.Ed. SE Programme (Distance Mode) is of 2 years. However, the Student- Teacher is permitted to complete within a maximum period of 4 years, after enrolment.

## 4.4 பயிற்று மொழி, தேர்வுகள் (Medium of Instruction and Examination)

பி.எட். (சிறப்புக் கல்வி) படிப்புகள் தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் பயிற்றுவிக்கப்படுகிறது. எனினும், ஆசிரிய - மாணவர்கள் தங்களுடைய ஒப்படைப்புகள், பயிற்சி பதிவேடுகள் மற்றும் பாட இறுதித்தேர்வுகளை தமிழில் அல்லது ஆங்கிலத்தில் எழுதலாம்.

The medium of instruction is both Tamil and English. However, the student - teachers are allowed to prepare their assignments, practical records and take the term-end examinations either in English or Tamil.

## 4.5 தகுதி (Eligibility)

விண்ணப்பதாரர்கள் பல்கலைக்கழக மானியக்குழு அங்கீகரித்த பல்கலைக்கழகங்களில் 10+2+3 அல்லது 11+1+3 கல்வி முறையின் கீழ் இளநிலைப் பட்டம் பெற்றிருக்கவேண்டும். மேல்நிலைக் கல்வித் தகுதி (+2) இல்லாமல் நேரடியாக இளநிலைப் பட்டம் பெற்றவர்களும், இளநிலைப் பட்டம் பெறாமல் நேரடியாக முதுநிலைப்பட்டம் பெற்றவர்களும் விண்ணப்பிக்கத் தகுதியற்றவர் ஆவர்.

The candidates should have passed the UG Degree Examination from any UGC recognised University in the 10+2+3 stream or 11+1+3. Candidates who have a direct UG degrees without +2 qualification / Post-Graduate degrees without a UG degree are **not** eligible.

## 4.6 சேர்க்கை எண்ணிக்கை (In take)

மொத்த இடங்கள் 500 ஆகும். ஒரு படிப்பு மையத்தில், ஒரு சிறப்புப் பாடப்பிரிவிற்கு 40 நபர்கள் என்னும் விகிதத்தில் சேர்க்கை மேற்கொள்ளப்படும்.

Total number of seats is 500 out of which 40 seats are allotted for each Programme Study Centre.

**4.7 முன்னுரிமை (Weightage):** விண்ணப்பதாரர் கீழ்க்கண்ட ஏதேனும் ஒன்றில் தகுதிபெற்றிருப்பின் 10 கூடுதல் மதிப்பெண் வழங்கப்படும்.

If the applicant satisfy any one of the following criteria additional 10 marks will be allotted.

அ. ஊனமுற்ற குழந்தையின் பெற்றோராக இருத்தல்.

Parent of a child with disability.

ஆ. ஊனமுற்ற நபராக இருத்தல்.

Person with disability.

இ. ஆர்.சி.ஐ - இல் பதிவு செய்த சான்றிதழ் பெற்றிருத்தல்.

Possess RCI Registration Certificate.

குறிப்பு: முன்னுரிமை கோறும் விண்ணப்பதாரர்கள் மேற்குறிப்பிட்டதற்கான சான்றிதழ்களை விண்ணப்பப்படிவம் பூர்த்தி செய்யும் பொழுதும் சான்றிதழ்களை சரிபார்க்கும் பொழுதும் கொண்டிருக்க வேண்டும்.

**Note:** The applicants claiming the weightage must have the certificates as mentioned above at the time of filling the application and verification of documents.

## 4.8 நுழைவுத் தேர்வு மற்றும் முன்னுரிமை மதிப்பெண்கள் (Entrance Examination and Weightage Marks)

தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் நடத்தும் நுழைவுத் தேர்வின் அடிப்படையில் சேர்க்கை நடைபெறும். முன்னுரிமைக்கான மதிப்பெண்கள் முன்னுரிமை வழங்கல் விதிமுறைக்கு உட்பட்டு விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்படும்.

Admission will be done on the basis of the Score obtained in the Entrance Examination conducted by TNOU. Weightage marks will be given to the candidates as per the weightage criteria.

கீழ்க்கண்டவாறு மதிப்பெண்கள் அளிக்கப்பட்டு தரவரிசைப் பட்டியல் தயார் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | நுழைவுத் தேர்வு | - | 100 மதிப்பெண் |
| 2. | ஊனமுற்ற குழந்தையின் பெற்றோராக இருத்தல் | - | 10 மதிப்பெண் |
| | (அல்லது) | | |
| | ஊனமுற்ற நபராக இருத்தல் | - | 10 மதிப்பெண் |
| | (அல்லது) | | |
| | ஆர்.சி.ஐ - இல் பதிவு செய்த சான்றிதழ் பெற்றிருத்தல் | - | 10 மதிப்பெண் |

.

The rank-list will be prepared by awarding marks to the following criteria.

| | | | |
|---|---|---|---|
| 1. | Entrance Examination | - | 100 Marks |
| 2. | Parent of a child with disability | - | 10 Marks |
| | (or) | | |
| | Person with disability | - | 10 Marks |
| | (or) | | |
| | Possess RCI Registration Certificate | - | 10 Marks |

## 4.9 ஒரே மதிப்பெண் கொண்டோர் போட்டியை சரிசெய்தல்
**(To break the same score (a tie) in the rank list)**

பி.எட். சிறப்புக் கல்வி சேர்க்கைக்கு, ஒரே மதிப்பெண்களைக் கொண்ட விண்ணப்பதாரர்களுக்கிடையே நிலவும் போட்டியை சரிசெய்ய கீழ்க்கண்ட விதிமுறைகள் பின்பற்றப்படுகின்றன.

For admission to B.Ed. SE, when two or more candidates secure the same score (a tie) in the rank list, the following criteria will be considered for final selection to break the tie in the following order.

♦ பிறந்த தேதி - வயது மூப்பு அடிப்படையில் ஒரு மதிப்பெண் வழங்கப்படும்.

Based on date of birth - seniority one mark will be awarded.

♦ மேலும் போட்டி நீடித்தால், ஆங்கில எழுத்து வரிசையில் மாணவர்களின் சேர்க்கை தரவரிசை செய்யப்படும்.

If the tie still persists, the selection will be made by considering the alphabetical order of the names of the candidates.

## 4.10 பி.எட். சிறப்புக் கல்வி சேர்க்கை விதிமுறைகள்
### (B.Ed. SE Admission Procedures)

அ. பி.எட். சிறப்புக் கல்வி படிப்புக்கு தமிழ் மற்றும் ஆங்கில பயிற்று மொழிக்கு ஒரே விண்ணப்பம் வழங்கப்படுகிறது. ஒரே நுழைவுத் தேர்வு நடைபெறும். *விண்ணப்பதாரர் பி.எட். சிறப்புக் கல்வியில் ஏதேனும் ஒரு பயிற்று மொழியை தேர்ந்தெடுக்க வேண்டும்.* தமிழ்நாடு முழுவதும் நடத்தப்படும் நுழைவுத் தேர்வில் விண்ணப்பதாரர் பெறும் மதிப்பெண் அடிப்படையில் சேர்க்கை நடைபெறும்.

Application is common for both English and Tamil Medium of B.Ed. SE. Entrance Examination is also common. *The candidate has to select any one of the medium either Tamil or English. B.Ed. SE.* Admission will be given based on the score obtained by the candidate in the Entrance Examination conducted by TNOU all over Tamil Nadu.

ஆ. தாழ்த்தப்பட்ட பிரிவினர், பழங்குடியினர் (எஸ்சி/எஸ்டி), தாழ்த்தப்பட்ட பிரிவினர் (அருந்ததியர்), மிகவும் பிற்படுத்தப்பட்டோர்/ சீர் மரபினர் (எம்பிசி/டிஎன்சி), பிற்படுத்தப்பட்டோர்-முஸ்லீம்கள் தவிர (பிசி - ஓ), பிற்படுத்தப்பட்டோர் - முஸ்லீம்கள் (பிசி - எம்), இதர இனத்தவர் (ஓசி) மற்றும் ஊனமுற்றோர் (உடல் ஊனமுற்றோர், கண்பார்வையற்றோர்) ஆகியோருக்கான இட ஒதுக்கீட்டிற்கு தமிழ்நாடு அரசின் விதிமுறைகளும் வரையறைகளும் பின்பற்றப்படும். விவரங்கள் கீழ்க்காணும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

**Reservation of seats** for candidates belonging to SC/ST, SC (Arunthathiyars), MBC DNC, BC - O (Except Muslims), BC - M (Muslims only), OC communities and handicapped (both physical and visual) will be made as per the rules and regulations of Government of Tamil Nadu as detailed below.

### இடஒதுக்கீடு (Reservation of Seats)

| வகுப்புகள் | இடஒதுக்கீடு |
|---|---|
| (ஓசி) இதர வகுப்பினர் **(OC)** | 31% (தமிழ்நாட்டைச் சார்ந்த முன்னாள் இராணுவத்தினரின் பிள்ளைகள் 1%, உடல் ஊனமுற்றோர் 3% உள்ளடங்குவார்கள். இவர்களுக்கான தரவரிசைப் பட்டியலின் படி, மற்ற மாணவர்களுடன் போட்டியிடுவர்) |
| (பிசி-ஓ) பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் - முஸ்லீம்கள் தவிர **(BC - O)** | 26.5% |
| (பிசி-எம்) பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் - முஸ்லீம்கள் மட்டும் **(BC - M)** | 3.5% |
| (எம்பிசி/ டிஎன்சி) 'மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர் **(MBC/DNC)** | 20% |
| (எஸ்சி) தாழ்த்தப்பட்டவர் **(SC)** | 15% |
| (எஸ்சி) தாழ்த்தப்பட்டவர் - அருந்ததியர்கள் **(SC Arunthathiyars)** | 3% |
| (எஸ்டி) பழங்குடி இனத்தவர் **(ST)** | 1% |

இ. பி.எட். சிறப்புக் கல்வியில் சேர்க்கைக்கான மொத்த இடங்கள் 500 ஆகும். தமிழ் (250 மாணவர்கள்) மற்றும் ஆங்கில (250 மாணவர்கள்) பயிற்றுமொழிக்கான சேர்க்கை தனித்தனி தரவரிசை அடிப்படையில் நடைபெறும்.

In B.Ed. SE, the total strength of seats for admission is 500. These candidates will be admitted to both Tamil medium (250 students) and English medium (250 students) based on the rank list separately prepared for each medium.

## 4.11 கல்விக் கட்டணம் (Programme Fee)

### 4.11.1 பி.எட். சிறப்புக்கல்வி (B.Ed.SE) கல்விக் கட்டணம்

கீழ்க்காணும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது போன்று கல்விக் கட்டணம் ரூ. 20,300 - ஐ முழுபடிப்பு கால அளவிற்கு சேர்க்கையின் பொழுதே செலுத்தவேண்டும்.

Programme fee of Rs. 20,300 should be paid for the entire programme of study at the time of admission as prescribed in the following table.

| காலம் Programme | பதிவுக் கட்டணம் Registration Fee ரூ. | தபால் கட்டணம் Postal Fee ரூ. | கல்விக் கட்டணம் Tuition Fee ரூ. | செய்முறைக் கட்டணம் Practical Fee ரூ. | மொத்தம் Total ரூ. |
|---|---|---|---|---|---|
| பி.எட். சிறப்புக் கல்வி (B.Ed. SE) | 200/- | 100/- | 17,000/- | 3,000/- | 20,300/- |

வங்கி வரைவோலையின் பின் பக்கத்தில், பின்வரும் விவரங்களை பெரிய எழுத்துக்களில் எழுதுக:
Please write on the back side of the Demand Draft in capital letters the following details:

| | |
|---|---|
| ஆசிரிய மாணவரின் பெயர் (Name of the Student-teacher) | |
| படிப்பு (Programme) | பி.எட். சிறப்புக் கல்வி (B.Ed.SE) |
| பதிவு எண் (Enrolment Number) | |
| வங்கியின் பெயர் மற்றும் தேதி (Name of the Bank & Date) | |
| தொகை (Amount) | ரூ. 20, 300/- |

### 4.11.2 கட்டணத் தொகை திருப்பியளித்தல் மற்றும் மாற்றியமைத்தல் (Fee Refund and Revision)

மாணவர்கள் பி.எட். சிறப்புக்கல்வி சேர்க்கைக்கு பிறகு, செலுத்தப்பட்ட கட்டணத் தொகை *திருப்பித்தரப்படமாட்டாது.* தேவை நேரிடின், கல்வி கட்டணத்தை மாற்றியமைக்க பல்கலைக்கழகத்திற்கு முழு அதிகாரமுண்டு.

After the candidate is selected for admission, fee paid is *not refundable.* The University reserves the right to change the fee structure if required.

## 5 பாட அமைப்பு (Programme Structure)

பி.எட். சிறப்புக் கல்வி படிப்பில் நான்கு பாடப்பிரிவுகள் உள்ளன. அவை மொத்தம் 52 தகுதி அளவெண்களைக் கொண்டது.

பிரிவு அ *மையப்பாடங்கள்:* அனைத்துப் பாடங்களும் கட்டாயமானவை.

பிரிவு ஆ *பாடப்பொருள்சார் கற்பித்தல் முறைகள்:* ஆசிரியர் மாணவர்கள் கொடுக்கப்பட்ட விருப்பப்பாடம் I இல் ஏதேனும் ஒரு பாடத்தையும், விருப்பப்பாடம் II இல் பட்டப்படிப்பிற்கு தொடர்புடைய ஒரு பாடத்தையும் தேர்ந்தெடுக்க வேண்டும்.

பிரிவு இ *முதன்மைப் பாடங்கள்:* இப்பிரிவில் கண் பார்வைக் குறைபாடு (Visual Impairment), கேட்கும் திறன் குறைபாடு (Hearing Impairment), மனவளர்ச்சி குன்றியமை (Mental Retardation) என்ற மூன்று முதன்மைப் பாடங்கள் உள்ளன. ஒவ்வொரு சிறப்பு பாடமும் தலா மூன்று பாடங்களைக் கொண்டுள்ளன. மாணவ ஆசிரியர்கள் இவற்றுள் ஏதாவது ஒரு முதன்மைப் பாடப்பிரிவை தேர்ந்தெடுக்க வேண்டும்.

பிரிவு ஈ *செய்முறைப் பாடங்கள் :* ஒவ்வொரு மாணவரும் செய்முறைப் பாடங்களைக் கட்டாயமாக நிறைவு செய்ய வேண்டும்.

B.Ed. SE Programme consists of four groups of courses accounting 52 credits which are classified as follows:

**Group A** *Core Courses:* All these courses are compulsory.

**Group B** *Content Based Methodology Courses:* The student-teacher should choose any one subject from Optional I and another subject from Optional II which should be related to the major subject of his/her graduation.

**Group C** *Specilization Courses:* There are three specialization sub groups, viz., Visual Impairment, Hearing Impairment and Mental Retardation. Each sub group consists of three courses. Every student - teacher should select one sub-group and study all the three courses given in that group.

**Group D** *Practical Courses:* All the student teachers should complete the Practical Courses.

**Group A: Core Courses** (மையப் பாடங்கள்)

| பாடக் குறியீடு | பாடத் தலைப்பு | பயிலும் ஆண்டு | தகுதி அளவெண் |
|---|---|---|---|
| ED-001 | கற்பித்தல் நுட்பமும் கலைத்திட்ட வளர்ச்சியும்<br>Instructional Technology and Curriculum Development | முதலாம் ஆண்டு<br>I Year | 4 |
| ED-002 | கல்வி உளவியல்<br>Educational Psychology | | 4 |
| SED-001 | பல்வேறு ஊனங்களின் தன்மை மற்றும் தேவைகள் - ஓர் அறிமுகம்<br>Nature and Needs of Various disabilities - An Introduction | | 4 |
| ED-004 | வளரும் இந்திய சமுதாயத்தில் கல்வி<br>Education in the Emerging Indian Society | இரண்டாம் ஆண்டு<br>II year | 4 |

**Group B: Content Based Methodology** (பாடப்பொருள்சார் கற்பித்தல் முறைகள்)

| விருப்பப் பாடம் | பாடக் குறியீடு | பாடத் தலைப்பு | பயிலும் ஆண்டு | தகுதி அளவெண் |
|---|---|---|---|---|
| விருப்பப் பாடம் - I<br>(ஏதேனும் ஒரு பாடம்)<br>Optional I<br>(Any one) | ED-010 | தமிழ் கற்பித்தல்<br>Teaching of Tamil | முதலாம் ஆண்டு<br>I Year | 4 |
| | ED-011 | ஆங்கிலம் கற்பித்தல்<br>Teaching of English | | 4 |
| விருப்பப் பாடம் - II<br>Optional II<br>அடிப்படை பட்டத்துடன் தொடர்புடைய பாடம்<br>Selection of course related to Basic Degree | ED-012 | சிறப்புத் தமிழ் கற்பித்தல்<br>Teaching of Special Tamil | முதலாம் ஆண்டு<br>I Year | 4 |
| | ED-013 | சிறப்பு ஆங்கிலம் கற்பித்தல்<br>Teaching of Special English | | 4 |
| | ED-014 | அறிவியல் கற்பித்தல்<br>Teaching of Science | | 4 |
| | ED-015 | கணிதம் கற்பித்தல்<br>Teaching of Mathematics | | 4 |
| | ED-016 | சமூக அறிவியல் கற்பித்தல்<br>Teaching of Social Science | | 4 |
| | ED-017 | வணிகவியல் கற்பித்தல்<br>Teaching of Commerce | | 4 |
| | ED-018 | பொருளியல் கற்பித்தல்<br>Teaching of Economics | | 4 |
| | ED-019 | கணினி அறிவியல் கற்பித்தல்<br>Teaching of Computer Science | | 4 |

## Group C: Specialization Courses (முதன்மைப் பாடங்கள்)

### மனவளர்ச்சிக் குன்றியமை (Mental Retardation)

| பாடக் குறியீடு | பாடத் தலைப்பு | பயிலும் ஆண்டு | தகுதி அளவெண் |
|---|---|---|---|
| SEMR -01 | மனவளர்ச்சிக் குன்றியமையை கண்டறிதல் மற்றும் மதிப்பிடுதல்<br>Identification and Assessment of Persons with Mental Retardation | இரண்டாம் ஆண்டு<br>II Year | 4 |
| SEMR - 02 | கலைத்திட்டமும் கற்பித்தல் உத்திகளும்<br>Curriculum and Teaching Strategies | | 4 |
| SEMR - 03 | மனவளர்ச்சி குன்றியோர் - பல்கோணப் பார்வை<br>Mental Retardation - Its Multidisciplinary Aspect | | 4 |

### கேட்கும் திறன் குறைபாடு (Hearing Impairment )

| பாடக் குறியீடு | பாடத் தலைப்பு | பயிலும் ஆண்டு | தகுதி அளவெண் |
|---|---|---|---|
| SEHI - 01 | கேட்கும் குறைபாடுடைய குழந்தைகளின் மொழிசார் தகவல் தொடர்பு வளர்ச்சி<br>Facilitating Language, Communication Development in Children with Hearing Impaired | இரண்டாம் ஆண்டு<br>II Year | 4 |
| SEHI - 02 | காதுகேட்கும் குறைபாடுள்ளோருக்கான பேச்சு மற்றும் பேசும் திறனைக் கற்பித்தல் - ஓர் அறிமுகம்<br>Introduction to Speech and Speech Teaching to the Hearing Impaired | | 4 |
| SEHI - 03 | ஒலியியல் மற்றும் காது கேட்கும் குறைபாட்டிற்கு மறுவாழ்வு அளித்தல்<br>Audiology and Aural Rehabilitation | | 4 |

### கண்பார்வைக் குறைபாடு (Visual Impairment)

| பாடக் குறியீடு | பாடத் தலைப்பு | பயிலும் ஆண்டு | தகுதி அளவெண் |
|---|---|---|---|
| SEVI - 01 | பார்வைக் குறைபாடுள்ளோருக்கான கல்வி - ஓர் அறிமுகம்<br>Introduction to the Education of Children with Visual Impairment | இரண்டாம் ஆண்டு<br>II Year | 4 |
| SEVI - 02 | பார்வைக் குறைபாடுள்ளோருக்கான கல்வி அளிக்கும் முறைகள்<br>Educational Perspective of Visual Impairment | | 4 |
| SEVI - 03 | கண்பார்வைக் குறைபாடு கொண்ட குழந்தைகளுக்கான கற்பித்தல் முறைகள் மற்றும் உத்திகள்<br>Instructional Methods and Strategies for Teaching Children with Visual Impairment | | 4 |

**Group D: Practical Courses** (செய்முறைப் பாடங்கள்)

| பாடக் குறியீடு | பாடத் தலைப்பு | தகுதி அளவெண் |
|---|---|---|
| ED-030 | பள்ளிசார் செய்முறை பயிற்சிகள்<br>School-based Practicals | 4 |
| ED-031 | பயிற்சிப் பட்டறை சார் செய்முறைப் பயிற்சிகள்<br>Workshop-based Practicals | 4 |
| ED-032 | கற்பித்தல் பயிற்சி<br>Practice Teaching | 8 |

## 6 நுழைவுத் தேர்வுக்கு வழிகாட்டி (Guidelines to Entrance Examination)

நுழைவுத் தேர்விற்கான விண்ணப்பப் படிவத்தின் விலை ரூ.500/-

விண்ணப்பப் படிவங்களை நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ பெறலாம்.

**The cost of Application form for Entrance Examination is Rs.500/-.**

The application form can be obtained either in person or by post.

அ) நேரடியாக **(In Person)**

பல்கலைக்கழக அலுவலகம், பல்கலைக்கழக ஒருங்கிணைப்பு மையங்கள், அனைத்து பி.எட். சிறப்புக் கல்வி மையங்களில் ரூ.500/-ஐ பணமாகவோ அல்லது "Tamil Nadu Open University" என்ற பெயரில் Chennai - இல் மாற்றத்தக்க வகையில் பெற்ற வங்கி வரைவோலையாகவோ செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

The Application form and Prospectus can be directly obtained in person either from the University Office, University Coordinating Centres (UCC) or B.Ed. (SE) Study Centres, by way of Cash, Demand Draft for **Rs.500/-** drawn in favour of **"Tamil Nadu Open University"** payable at **Chennai.**

ஆ) தபால் மூலமாக **(By Post)**

விண்ணப்பங்களை தபால் மூலமாகப் பெற விரும்புபவர்கள் "**பதிவாளர், தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், எண். 577, அண்ணா சாலை, சைதாப்பேட்டை, சென்னை-15,**" என்ற அலுவலக முகவரிக்கு "Tamil Nadu Open University" என்ற பெயரில் Chennai இல் மாற்றத்தக்க வகையில் ரூ.550/-க்கான வங்கி வரைவோலை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

Those who wish to get the Application form and Prospectus by post should send a Demand Draft for **Rs.550/-** drawn in favour of **"Tamil Nadu Open University"** payable at **Chennai** to **"The Registrar, Tamil Nadu Open University, No. 577, Anna Salai, Saidapet , Chennai-15."**

வங்கி வரைவோலையின் பின்புறம் எழுத வேண்டியவை:

Please write on the back side of the Demand Draft in capital letters the following details:

| | |
|---|---|
| விண்ணப்பதாரரின் பெயர், (Name of the Applicant) | |
| படிப்பு (Programme) | பி.எட். சிறப்புக் கல்வி |
| முகவரி தொலைபேசி எண்ணுடன் (Address with Phone Number) | |

## 7 கல்விமைய ஒதுக்கீடு (Programme Study Centre Allotment)

### 7.1 பி.எட். சிறப்புக் கல்வி மாணவர்களுக்கு கல்வி மையங்கள் ஒதுக்கீடு (Allotment of B.Ed. SE students to the Programme Study Centres)

♦ தேர்ந்தெடுக்கப்படும் ஒவ்வொரு மாணவருக்கும் கல்வி மைய ஒதுக்கீடு, பல்கலைக்கழகம் வரையறுத்த விதிகளின் படி வழங்கப்படும். கல்வி மைய ஒதுக்கீடு அளிக்கப்பட்ட பிறகு, எக்காரணம் கொண்டும் வேறுகல்வி மையத்திற்கு மாற்றம் பெற இயலாது.

Programme Study Centre for each selected candidate will be allotted as per the regulations of Tamil Nadu Open University. After the allotment of Programme Study Centre, the candidate cannot get the change of Programme Study Centre.

♦ ஒவ்வொரு மாணவரும் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட கல்வி மையங்களில் பயிற்சி பெற வேண்டும். மொத்தமுள்ள 500 மாணவர்களும் ஆர்.சி.ஐ அனுமதி பெற்ற கல்வி மையங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுவர். ஒவ்வொரு கல்வி மையத்திற்கும் 20 தமிழ் பயிற்றுமொழி மாணவர்கள் மற்றும் 20 ஆங்கில பயிற்று மொழி மாணவர்கள் என பகிர்ந்தளிக்கப்படுவார்கள்.

Each student should undergo the training in the allotted institutions. The total of 500 students will be distributed to the RCI recognised Programme Study Centres for undergoing the programme. Each Programme Study Centre will be allotted 20 Tamil Medium Students and 20 English Medium Students.

♦ பி.எட். சிறப்பு கல்வி மாணவர்களுக்கான மூன்று சிறப்பு பிரிவுகளாகிய 1) கண்பார்வைக் குறைபாடு, 2) கேட்கும் திறன் குறைபாடு, 3) மனவளர்ச்சிக் குன்றியமை ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றினைத் தெரிவு செய்ய வேண்டும். ஒருவர் அவ்வாறு தெரிவு செய்யும்போது, ஒரு குறிப்பிட்ட பிரிவில் இடம் இல்லையெனில், பல்கலைக்கழகம் அவரை வேறுபிரிவிற்கு மாற்ற அதிகாரம் உண்டு.

B.Ed. SE has three specialisation areas - 1) Visual Impairment, 2) Hearing Impairment, 3) Mental Retardation. The candidates have to choose any one specialisation. If there is no vacancy in the particular specialisation, the University has a right to allot any other specialisation according to the availability of vacancy.

- மாணவர்களின் கல்வி மைய ஒதுக்கீடு அவர்கள் நுழைவுத் தேர்வில் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையிலும் (தரவரிசைப்படி), பிற முன்னுரிமை கூறுகள் அடிப்படையிலும், தமிழக அரசின் இட ஒதுக்கீடு கொள்கையை பின்பற்றியும் சேர்க்கை கலந்தாய்வின் போது வழங்கப்படும். எனினும், மாணவர் விரும்பிய கல்வி மையம் கிடைக்காத பட்சத்தில் பல்கலைக்கழகத்தின் முடிவே இறுதியானது.

  The allotment of the Programme Study Centre for the candidates is based on the marks obtained in the entrance examination, other preference criteria and also following the community reservation policy of Government of Tamilnadu during admission counselling. However, if vacancy is not available as per the candidate's choice, the decision of the University will be final in this regard.

### 7.2 கல்வி மையங்கள் (Programme Study Centres)

ஆர்.சி.ஐ. அங்கீகாரம் பெற்ற 9 கல்விமையங்கள் பற்றிய விவரங்கள் பிற்சேர்க்கை **இணைப்பு I** - யில் காண்க. இக்கல்வி மையங்களை, இந்திய மறுவாழ்வுக் கழகத்தின் அனுமதியுடன் பல்கலைக்கழகம் எப்பொழுது வேண்டுமானாலும் மாற்றியமைக்கலாம்.

RCI recognised 9 Programme Study Centres are presented in **Annexure I** respectively. These Programme Study Centres may be changed at any time by the University with the approval of the RCI.

## 8 நுழைவுத் தேர்வு (Entrance Examination)

### 8.1 நுழைவுத் தேர்வு குறித்த விளக்கம்

1. நுழைவுத் தேர்வு 2 மணிநேரம் நடைபெறும். இதில் 100 கேள்விகளுக்கு 100 மதிப்பெண்கள் வழங்கப்படும்.

   The Entrance Examination will be for the duration of 2 hours and for a maximum of 100 marks with 100 questions.

2. கேள்விகள் பல தேர்வு வகையைச் சார்ந்தவை. **OMR** (ஒளி குறியீடு பதிவுத்தாள்) விடைத்தாள்கள் நுழைவுத் தேர்வு எழுதுபவர்களுக்கு வழங்கப்படும்.

   Questions will be of multiple-choice type. Optical Mark Reader (OMR) coding answer sheets will be supplied to the candidates.

3. ஒவ்வொரு தவறான விடைக்கும் தலா **¼** மதிப்பெண் குறைக்கப்படும்.

   It should be noted that ¼ mark will be reduced for each wrong answer.

4. நுழைவுத் தேர்விற்கான வினாத்தாள் தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளில் இருக்கும்.

   The question paper for the Entrance Examination will be bilingual in Tamil and English.

5. நுழைவுத் தேர்வு விடைத்தாள்கள் OMR தொழில் நுட்பத்தை பயன்படுத்தி மதிப்பீடு செய்யப்படும்.

The evaluation of the answer sheets of the Entrance Examination will be done using OMR technology.

6. நுழைவுத்தேர்வு முடிந்தபின் கேள்வித்தாளை உடனடியாகத் தேர்வுக் கண்காணிப்பாளரிடம் திருப்பித்தர வேண்டும். மாணவர்கள் கேள்வித்தாளை எடுத்துச்செல்வதோ, முறையற்ற வகையில் பயன்படுத்துவதோ கூடாது.

The question booklet should be returned back to the invigilator in examination hall immediately after writing the entrance examination. No question booklet should be mishandled or taken out by the candidates.

7. நுழைவுத்தேர்வு முடிந்தபின்னர், தேவைப்பட்டால் மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் உரிய கட்டணத்தைச் செலுத்தி, கேள்வித்தாளின் நகலைப் பெற்றுக்கொள்ளலாம்.

After the entrance examination is over, a copy of question booklet can be obtained from the University by paying prescribed fee.

8. வினாத்தாளின் உள்ளமைப்பு பின்வருமாறு கொடுக்கப்பட்டுள்ளது.

The Structure of the Question paper will be as detailed below:

| பிரிவு | பாடம் | வினாக்களின் எண்ணிக்கை | மதிப் பெண்கள் |
|---|---|---|---|
| | **Part A - பகுதி A** | | |
| பிரிவு - I<br>Section-I | ஆங்கிலத்தில் படித்தறியும் ஆற்றல்<br>General English Comprehension | 10 | 10 |
| பிரிவு - II<br>Section-II | தர்க்க மற்றும் பகுப்பாய்வு எண்ணம்<br>Logical and Analytical Reasoning | 20 | 20 |
| பிரிவு - III<br>Section-III | பொது அறிவு<br>General Knowledge | 20 | 20 |
| பிரிவு - IV<br>Section-IV | கற்பித்தல் நாட்டம்<br>Aptitude for Teaching | 10 | 10 |
| பிரிவு - V<br>Section- V | கல்வியியல் விழிப்புணர்வு<br>Educational Awareness | 10 | 10 |
| பிரிவு - VI<br>Section -VI | கற்பித்தல் கற்றல்<br>Teaching - Learning | 10 | 10 |

| பிரிவு | பாடம் | வினாக்களின் எண்ணிக்கை | மதிப் பெண்கள் |
|---|---|---|---|
| Section-VII<br>பிரிவு - VII | **Part B - பகுதி B**<br>* Subject Competence *(any one)*<br>* தகுதிப் பாடம் (ஏதேனும் ஒன்று)<br>(i) Science - அறிவியல்<br>(ii) Mathematics - கணிதம்<br>(iii) Social Science - சமூக அறிவியல்<br>(iv) English - ஆங்கிலம்<br>(v) Computer Science -கணினி அறிவியல்<br>(vi) Tamil - தமிழ்<br>(vii) Commerce - வணிகவியல்<br>(viii) Economics - பொருளியல் | 20 | 20 |
| | மொத்தம் | 100 | 100 |

- ⋆ *பிரிவு - VII தகுதிப் பாடம் சார்ந்த தேர்வு வினாக்கள் IX முதல் XII வகுப்பு வரையுள்ள தமிழக அரசு பாடத்திட்டத்தின் பாடப்புத்தகங்களை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்படுகின்றன.*
- ✸ Test items in Part-VII will be based on the contents of the textbooks of IX to XII Classes (State Board syllabus) published by the Tamil Nadu Textbook Corporation, Government of Tamilnadu.

> **மாதிரி நுழைவுத் தேர்வு வினா இணைப்பு II இல் உள்ளது.**
>
> A model question paper pattern for Entrance Examination is given in **Annexure II.**

## 8.2 நுழைவுத் தேர்வு மையங்கள் மற்றும் தேதி (Entrance Examination Centre and Date)

♦ நுழைவுத் தேர்வானது தமிழகத்தின் முக்கிய நகரங்களில் 09.10.2011 ஆம் தேதி, (தற்காலிகமானது) ஞாயிறு காலை 11.00 மணி முதல் மதியம் 01.00 மணி வரை நடைபெற உள்ளது. மேற்படி நுழைவுத் தேர்வு மையங்களின் ஊர் பட்டியல் **இணைப்பு II** இல் கொடுக்கப்பட்டுள்ளது. ஏதாவது காரணங்களுக்காக, எந்த தேர்வு மையத்தையும் மாற்றுவதற்கோ அல்லது நீக்குவதற்கோ பல்கலைக்கழகத்திற்கு முழு அதிகாரம் உண்டு.

The Entrance Examination will be conducted at important cities in Tamilnadu from **11:00 a.m. to 1:00 p.m. on 09.10.2011 (tentative).** The place of the Entrance Examination Centres are given in the **Annexure II. The University reserves the right to change or cancel any Examination centre.**

- தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்களுக்கு நுழைவுத் தேர்வுக்கான ‘நுழைவுச் சீட்டு’ பல்கலைக்கழகத்திலிருந்து நேரடியாக சான்றிதழ் ஒப்புதல் தபால் மூலம் அனுப்பப்படும். நுழைவுத் தேர்வு எழுதுவதற்கான தகுதி குறித்து பல்கலைக்கழகம் எடுக்கும் முடிவே இறுதியானது.

  The Hall-tickets will be sent to the eligible candidates by the University directly by certificate of posting. The decision of the University will be final on deciding the eligibility to appear for Entrance Examination.

- பி.எட். சிறப்புக் கல்வி நுழைவுத் தேர்வு நடைபெறும் தேதிக்கு ஒருவாரத்திற்கு முன்பு விண்ணப்பத்தாரரின் முகவரிக்கு ‘நுழைவுச் சீட்டு’ தபாலில் அனுப்பி வைக்கப்படும். இவ்வாறு நுழைவுச் சீட்டு கிடைக்கப்பெறாதவர்கள் அவர்களுக்குரிய நுழைவுத் தேர்வு ஒருங்கிணைப்பு மையத்திற்கு நுழைவுத் தேர்வு நடைபெறும் தேதிக்கு முன்தினத்தில் நேரடியாகச் சென்று, பி.எட். சிறப்புக் கல்வி விண்ணப்பம் செய்ததற்கான ஆதாரத்தையும் இரண்டு கலர் புகைப்படங்களையும் கொண்டு சென்று ‘மாற்று நுழைவுச் சீட்டு’ பெற்று கொள்ளலாம். நுழைவுத் தேர்வு நாளன்று நுழைவுச் சீட்டு வழங்கப்படமாட்டாது.

  The Hall ticket will be sent by post to the Address mentioned in the application one week before the commencement of the Entrance Examination. Those who have not received the Hall ticket can receive the duplicate Hall ticket from the respective coordinating centres on the previous day of the Entrance Examination by producing proof for the despatch of the application and two passport colour photograph. Hall tickets will not be issued on the date of examination.

- விண்ணப்பப் படிவத்தை உரிய காலத்தில் சமர்ப்பித்த அனைத்து மாணவர்களுக்கும் தேர்வு அனுமதிச்சீட்டுக்கள் அனுப்பப்படும். தகவல் கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளைப் பல்கலைக்கழகம் உறுதியாகப் பின்பற்றுகிறது. எனவே விண்ணப்பப்படிவத்தை மாணவர்கள் கவனமாகப் படித்தபின் அதனை நிரப்ப வேண்டும். மாணவர்கள் நுழைவுத்தேர்வு எழுத அனுமதிக்கப்பட்டாலும், அனுமதி ஆலோசனைக் கூட்டத்தின்போது உண்மைச் சான்றிதழ்கள் சரிபார்க்கப்படும் வரை, பி.எட். சிறப்புக் கல்வி சேர்க்கைக்குப் பல்கலைக்கழகம் எவ்விதத்திலும் பொறுப்பேற்காது.

  The hall tickets will be sent to all candidates who submitted the application OMR in time. The University strictly follows the regulations given in the prospectus. Hence, while filling up the applications, the candidates should thoroughly study the prospectus and fill-up accordingly. Until the checking of original certificates during admission counselling, the University does not take any responsibility for accepting the candidature for admission into B.Ed. SE even if the candidates are allowed for writing entrance examination.

## 8.3 நுழைவுத் தேர்வு முடிவுகள் அறிவிப்பு (Entrance Examination Results Announcement)

- நுழைவுத் தேர்வு நடைபெற்ற ஒரு மாதத்திற்குள் தேர்வு முடிவுகள் வெளியிடப்படும். பல்கலைக்கழக இணையத்தளம் **www.tnou.ac.in** மூலம் தேர்வு முடிவுகள் வெளியிடப்படும். நுழைவுத் தேர்வு எழுதிய அனைவருக்கும் அவர் பெற்ற மதிப்பெண் சான்றிதழ் அனுப்பிவைக்கப்படும். பி.எட். சிறப்புக் கல்வி சேர்க்கைக்கு தேர்வு செய்யப்பட்டோருக்கு கடிதம் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

  The scores obtained by the candidates in the Entrance Examination will be published in the website of Tamil Nadu Open University **www.tnou.ac.in** within a month from the date of Entrance Examination. The mark statement will be sent to all candidates who appeared for an Entrance Examination. The selection order for the provisionally selected candidates for the admission into B.Ed. SE will be sent through the registered post.

- மறுமதிப்பீடு இல்லை: நுழைவுத்தேர்வில் பதில்கள் ஒளிக்குறியீட்டுணர் விடைத்தாளில் குறிப்பிடப்படுகின்றன. ஒளிக்குறியீட்டுணர் விடைத்தாள்கள் கணினி மூலம் அலகிடப்பட்டு, முடிவுகள் வெளியிடப்படுவதால், மதிப்பெண்களில் பிழைகள்/மாற்றங்கள் ஏற்பட வாய்ப்புக்கள் இல்லை. எனவே விண்ணப்பதாரர்களுக்கு விடைத்தாள்களை மறுமதிப்பீடு செய்யக்கோரும் முறை இல்லை.

  **No revaluation:** In entrance examination, the answers are marked in OMR coding sheet. As this OMR answer sheet is scanned by computer for publishing result, there won't be any change in award of marks. Hence, there is no revaluation option for the candidates.

## 8.4 பயணப்படி இல்லை

**நுழைவுத் தேர்வு எழுதவோ அல்லது சேர்க்கை கூட்டத்திற்கு வருவதற்கோ பயணப்படி/இதர படிகள் வழங்கப்படமாட்டாது.**

No TA/DA will be paid to the candidates for attending Entrance Examination and Admission Counselling.

## 8.5 மாணவர் சேர்க்கைக்கான அழைப்புக் கடிதம் (Admission Call Letter)

பல்கலைக்கழகத்தால் தமிழ் மற்றும் ஆங்கில வழியில் பி.எட். சிறப்புக் கல்வி பயில தற்காலிகமாகத் தேர்ந்தெடுக்கப்படும் 500 மாணவர்களுக்கு, அவர்களின் முகவரிக்கு அழைப்புக் கடிதம் அனுப்பப்படும். மாணவர் சேர்க்கையும் கல்வி மையத் தேர்வும், பல்கலைக்கழகத்திலோ அல்லது ஏதேனும் ஒரு கல்வி மையத்தில் நடைபெற உள்ள சேர்க்கைக் கலந்தாய்வுக் கூட்டத்தில் முடிவு செய்யப்படும். கலந்தாய்வுக் கூட்டம் நடைபெறும் நாள் பல்கலைக்கழகத்தால் பதிவு தபால் மூலம் தெரிவிக்கப்படும். கலந்தாய்வுக் கூட்டத்தில் கலந்து கொள்ளாத மாணவர்களுக்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

The University will send “Call Letters” to all provisionally selected 500 candidates for B.Ed. Special Education Tamil and English Medium. Selection for admission and allotment of Study Centres will be made through Admission Counselling on the basis of merit obtained in the Entrance Examination. Counselling will be conducted at Tamil Nadu Open University Campus or at any Programme Study Centre on the dates which will be intimated individually. Those who do not report themselves on the day of the Admission Counselling Session will forfeit their claim for a seat.

## 8.6 மாணவர் சேர்க்கைக்கான கலந்தாய்வு (Students Admission Counselling)

சேர்க்கைக் கலந்தாய்வுக் கூட்டத்திற்கு வருகை தரும் மாணவர்கள் கீழ்க்காணும் தங்களுடைய உண்மையான கல்விச் சான்றிதழ் மற்றும் அதன் நகல் (Photostat Copies) படிவத்தில் யாரேனும் ஓர் அரசு அதிகாரியின் சான்றொப்பம் பெற்று வர வேண்டும்.

The candidates who are called for Admission Counselling should bring the following original certificates and photostat copies duly attested by Gazetted Officer for verification:

**அ. சான்றிதழ்களின் வரிசைப்பட்டியல்**

1. அழைப்புக் கடிதம் (Call Letter)
2. நுழைவுத் தேர்வு - மதிப்பெண் பட்டியல் (உண்மை நகல்)
   Entrance Examination Mark Statement (Original)
3. நுழைவுத் தேர்வு - அனுமதி நுழைவுச் சீட்டு (உண்மை நகல்)
   Entrance Examination Hall Ticket (Original)
4. படிவங்கள் - அழைப்புக் கடிதத்துடன் அனுப்பி வைக்கப்படும்
5. **சாதிச் சான்றிதழ் (Community Certificate)**

பி.எட். சிறப்புக் கல்வி விண்ணபத்தாரர்கள் கீழ்க்கண்ட வகுப்பினராக இருந்தால், நிரந்தர சாதிச் சான்றிதழ் கீழ்க்கண்ட அதிகாரிகளிடம் பெற்றிருக்கவேண்டும்:.

Permanent Community Certificate is to be obtained from the under-mentioned authorities if the candidates belong to the following categories.

| | |
|---|---|
| SC | தாசில்தார் - சொந்த வட்டம் |
| ST | வருவாய்ப் பிரிவு அலுவலர் (11.11.1989 க்கு பின்னர்) |
| BC - Others,<br>BC - Muslim &<br>MBC/DNC | தலைமை நிலைய துணை தாசில்தார்/<br>சிறப்பு துணை தாசில்தார் |

குறிப்பு: விண்ணப்பதாரர் சேர்க்கைக் கலந்தாய்வின் போது, உரிய அதிகாரியிடமிருந்து SC, ST, BC-O, BC-M & MBC/DNC சாதிச்சான்றிதழ் பெற்று சமர்பிக்கத் தவறினால் அவரது பி.எட். / பி.எட். சிறப்புக் கல்வி சேர்க்கை ரத்து செய்யப்படும் (G.O.Ms. 781, வருவாய்த்துறை, 02.05.1988).

**Note:** If a candidate who claims to belong to SC, ST, BC, MBC/DNC fails to produce the Community Certificate in original from the competent authority (in accordance with G.O.Ms.781, Revenue Department, dated May 2, 1988) at the time of admission counselling, the selection of such candidate will be cancelled.

6. **உடல் ஊனமுற்றோர்**

உடல் ஊனமுற்றோர் மற்றும் பார்வையற்றோர் மருத்துவச் சான்றிதழ் கட்டாயம் பெற்று வரவேண்டும் (மருத்துவ சான்றிதழ் வழங்கும் அதிகாரி-துணை சிவில் சர்ஜன் தகுதிக்குக் குறையாதவர்; ஊனத்தின் குறைபாடு-40 சதவிகிதத்திற்குக் குறையாமல் இருக்கவேண்டும்).

Medical Certificate is to be produced by Physically Handicapped and Blind candidates (Certificate issuing authority-not less than Assistant Civil Surgeon Category; Percentage of disability - not less than 40%).

7. **முன்னாள் இராணுவத்தினருக்கான சான்றிதழ் (புகைப்பட அத்தாட்சியுடன்)**
Ex-servicemen Certificate (with photograph proof).

8. 10 மற்றும் +2 மதிப்பெண் பட்டியல் (சான்றொப்பமிட்ட நகல்)

9. இளநிலை பட்டச்சான்றிதழ், பட்ட தற்காலிக தேர்ச்சிச் சான்றிதழ் (சான்றொப்பமிட்ட நகல்)

10. இளநிலை பட்ட மதிப்பெண் பட்டியல் (சான்றொப்பமிட்ட நகல்)

11. முதுநிலை பட்டச்சான்றிதழ், பட்ட தற்காலிக தேர்ச்சிச் சான்றிதழ் (சான்றொப்பமிட்ட நகல்)

12. முதுநிலை பட்ட மதிப்பெண் பட்டியல் (சான்றொப்பமிட்ட நகல்)

குறிப்பு 1: வரிசை எண் 5 முதல் 12-ல் கேட்கப்பட்ட உண்மைச் சான்றிதழ்கள் அனைத்தும் சரிபார்க்க வேண்டியுள்ளது. ஆகவே, அவற்றை தனியாக வரிசைப்படுத்தவேண்டும்.

குறிப்பு 2: கல்விக் கட்டணத்திற்கான வரைவுக் காசோலை மற்றும் 4 பாஸ்போர்ட் அளவு புகைப்படம் தனியாக சமர்பிக்கவேண்டும்.

ஆ. **பி.எட். சிறப்புக் கல்வி விண்ணப்பத்தில் தாங்கள் குறிப்பிட்ட முன்னுரிமைக் கூறுகளுக்கான சான்றிதழ்கள்:**

i. ஊனமுற்ற குழந்தையின் பெற்றோராக இருத்தல்.

ii. ஊனமுற்ற நபராக இருத்தல்.

iii. ஆர்.சி.ஐ - இல் பதிவு செய்த சான்றிதழ் பெற்றிருத்தல்.

**Produce the certificates for the weightage criteria as indicated by you in the application form**

i. Parent of a child with disability.

ii. Person with disability

iii. Possess RCI Registration Certificate

இ. மேலும் பிற தொடர்புடைய விவரங்கள்

Any other relevant document

## 9 பூர்த்தி செய்த விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி (Address to Send Filled-in Application)

பி.எட். சிறப்புக் கல்வி நுழைவுத் தேர்விற்கான விண்ணப்படிவத்துடன் (OMR), தொகுப்பு மதிப்பெண் பட்டியல் மற்றும் தற்காலிக பட்டம் / பட்டம் சான்றிதழ் மற்றும் ரூ. 6 அஞ்சல் தலை ஒட்டிய ஒப்புதல் அட்டை போன்றவற்றை பல்கலைக்கழகம் கொடுத்துள்ள பெரிய உறையிலிட்டு பல்கலைக்கழக அலுவலகத்தை 19.09.2011 தேதிக்குள் கிடைக்கப் பெறும் வகையில் அனுப்ப வேண்டும்.

The filled-in application form (OMR Sheet) for Entrance Examination, degree consolidated mark sheet with provisional certificate/degree certificate along with duly filled-in acknowledgement card affixed with postage of Rs.6/- are to be kept in the TNOU's printed cover (A4 Size brown) and this should be mailed to the following address so as to be received at the University Office on or before 19.09.2011.

விண்ணப்ப OMR-வுடன் தொகுப்பு மதிப்பெண் பட்டியல் மற்றும் தற்கால பட்டம்/பட்டம் சான்றிதழை சேர்த்து ஸ்டேபிலர்பின்/குண்டூசி இணைப்பு இல்லாமல் அனுப்ப வேண்டும்.

The candidate should not staple/pin the application OMR with the consolidated mark sheet and provisional certificate/Degree certificate of Qualifying degree.

| | |
|---|---|
| செயலாளர்<br>பி.எட். சிறப்புக் கல்வி<br>நுழைவுத் தேர்வு<br>தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்<br>எண். 577, அண்ணா சாலை, சைதாப்பேட்டை,<br>சென்னை - 600 015/ | **The Secretary**<br>B.Ed. Special Education<br>Entrance Examination<br>Tamil Nadu Open University<br>No. 577, Anna Salai, Saidapet,<br>Chennai - 600 015. |

குறிப்பு:

- ★ தொகுப்பு மதிப்பெண் பட்டியல் மற்றும் தற்காலிக பட்டம் / பட்டமளிப்பு சான்றிதழ் போன்றவைகளின் நகலை விண்ணப்பத்துடன் அனுப்ப வேண்டும்.
- ★ நிரப்பப்பட்ட விண்ணப்பப்படிவம் நேரடியாக பல்கலைக்கழகத்திற்கு மட்டுமே அனுப்பப்பட வேண்டும்.

**Note:**

- ★ Photostat Copy of Consolidated Mark Sheet, Provisional / Degree Certificate should be sent along with the application.
- ★ Filled-in Application should be sent directly to the University only.

## 10 சரிவர பூர்த்தி செய்யாத, காலதாமதமான விண்ணப்பங்கள் (Incomplete and Late applications)

♦ சரிவர பூர்த்தி செய்யப்படாத மற்றும் குறிப்பிட்ட தேதிக்குப்பிறகு கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் கட்டாயம் நிராகரிக்கப்படும். ஆகவே, விண்ணப்பதாரர்கள் விண்ணப்பப் படிவத்தை கவனமாகப் பூர்த்தி செய்து **செயலாளர், பி.எட். சிறப்புக் கல்வி நுழைவுத்தேர்வு, தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், எண்.** 577, **அண்ணா சாலை, சைதாப்பேட்டை, சென்னை** - 600 015 என்ற முகவரிக்கு 19.09.2011 - க்குள் பல்கலைக்கழக அலுவலகத்தில் சமர்ப்பிக்கவேண்டும். இது குறித்த எந்தவித கடிதத் தொடர்பும் வரவேற்கப்பட மாட்டாது.

Incomplete, late application forms, and also application forms furnishing false information will be summarily rejected without any intimation to the candidate concerned. Candidates are, therefore, advised to fill up the relevant columns carefully and submit the form to **The Secretary, B.Ed. Special Education Entrance Examination, Tamil Nadu Open University, No. 577, Anna Salai, Saidapet, Chennai - 600 015 on or before 19.09.2011.** In this connection no correspondence will be entertained.

## 11 விண்ணப்பதாரர் முகவரி (Applicant Address)

விண்ணப்பத்தில் தங்களது முகவரி தெளிவாக அஞ்சல் குறியீட்டு எண்ணுடன் எழுதப்பட வேண்டும். பி.எட். சிறப்புக் கல்வி சேர்க்கை நிறைவடையும் வரை தங்களால் கொடுக்கப்பட்ட முகவரிக்குத்தான் அனைத்து தகவல்களும் தெரிவிக்கப்படும். முகவரி மாற்றம் செய்ய அனுமதியில்லை.

Your address in OMR must be complete in all respects as the University will correspond with you in the address given by you in the application (OMR) until the B.Ed. SE admission process is over. The change of address is not allowed.

குறிப்பு : விண்ணப்படிவத்தில் கொடுக்கப்பட்டுள்ள முகவரியை பி.எட். சிறப்புக் கல்வி சேர்க்கை வரை மாற்ற இயலாது.

**Note :** Candidate’s address cannot be changed until the B.Ed. SE admission process is over.

## 12 முக்கிய தேதிகள் (துற்காலிகம்)

| | |
|---|---|
| விண்ணப்பப் படிவம் வினியோகத்திற்கான தொடக்க நாள்<br>Issue of Application & Prospectus | 17.08.2011 |
| விண்ணப்பப் படிவம் வினியோகத்திற்கான கடைசி நாள்<br>Last Date for Issue of Application & Prospectus | 19.09.2011 |
| பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள்<br>Last Date for the Submission of Filled-in Application Forms to TNOU’s Office | 19.09.2011<br>(மாலை 5 மணி வரை) |
| நுழைவுத் தேர்வு நாள்<br>Date of Entrance Examination | 09.10.2011 |
| தேர்வு முடிவு அறிவிப்பு நாள்<br>Announcement of Results | 21.10.2011 |
| பி.எட். சிறப்புக் கல்விச் சேர்க்கைக்கான கலந்தாய்வு நாட்கள்<br>Admission Counselling for B.Ed. SE Candidates of Both Tamil & English Medium | 07.11.2011 &<br>08.11.2011 |
| பி.எட். சிறப்புக் கல்வி வகுப்புகள் தொடக்கம்<br>B.Ed. SE Induction Programme | ஜனவரி, 2012 |

குறிப்பு : தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தில் பி.எட். சிறப்புக் கல்வி சேர்க்கை தகுதிகளின் அடிப்படையில் மட்டுமே நடைபெறுகிறது. விண்ணப்பதாரர்கள் பல்கலைக்கழகத்தால் நிர்ணயிக்கப்பட்ட வரம்புகளின்படி சேர்க்கைக்கான தகுதிகள் முழுமையையும் பூர்த்தி செய்த பின்னரே பி.எட். சிறப்புக் கல்வி படிப்பில் சேர்க்கப்படுவார்கள். பூர்த்தி செய்த விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாளன்று விண்ணப்பதாரர்கள் தகுதி வரம்புகளின்படி தகுதியற்றவர்களாக இருந்தால் சேர்க்கை வழங்கப்படமாட்டாது. விண்ணப்பதாரர்கள் சேர்க்கைக் குறித்து தனியார் நிறுவனங்கள் அல்லது தனி நபர்களின் தவறான வாக்குறுதிகளை நம்பவேண்டாம் என வலியுறுத்தப்படுகிறார்கள்.

**Note :** **Tamil Nadu Open University admissions to B.Ed. SE Programme are made strictly on the basis of merits. Only those candidates who satisfy the eligibility criteria fixed by the University will be admitted. Candidates will not be admitted if they are not eligible as per the eligibility criteria as on date of last date of submission of the filled-in application form. The candidates should not be misled by false promises for admission made by the private individuals or institutions.**

# 13 விண்ணப்பப் படிவம் பூர்த்தி செய்ய கவனிக்க வேண்டியவை

## 13.1 பொதுவான குறிப்புகள்

1. விண்ணப்பதாரர்கள் 2011-2013-ற்கான விளக்கக் கையேட்டுடன் இணைக்கப்பட்டுள்ள நுழைவுத் தேர்வு OMR படிவத்தை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

   Candidates must use the Entrance Examination Application 2011 - 2013 OMR Coding Sheet attached with the Prospectus only.

2. விண்ணப்ப படிவத்தை நகல் எடுத்து பயன்படுத்தக் கூடாது.

   Photocopy/reproduction/unauthorized printed copy of the application form will not be entertained.

3. விண்ணப்ப படிவத்திலுள்ள விவரங்கள் மாற்றத்தக்க தல்ல.

   The details given in the application cannot be changed.

4. ஒப்புதல் அட்டையில் தெளிவான அஞ்சல் குறியீட்டு எண்ணுடன் கூடிய முழுமுகவரி எழுதி ரூ.6/- அஞ்சல் தலை ஒட்டி விண்ணப்பத்துடன் அனுப்ப வேண்டும். விண்ணப்பம் அஞ்சல் மூலம் கிடைக்கப் பெறுவதில் ஏற்படும் கால தாமதத்திற்கோ அல்லது இழப்பிற்கோ பல்கலைக் கழகம் பொறுப்பாகாது.

   Candidates should clearly write their Postal Address on the **Acknowledgement Card** attached with the Application and affix Rs.6/- Postage Stamp. The University will not be responsible for any delay or loss of application form sent by post.

5. உண்மைச் சான்றிதழ்களை சரிபார்க்கும்பொழுது, விண்ணப்பத்தாரர் கொடுத்த தகவல்கள் தவறானதாக இருப்பது கண்டறியப்பட்டால் அவர் தற்காலிகமாக தேர்ந்தெடுக்கப் பட்டிருந்தாலும் அவரது சேர்க்கை உடனடியாக ரத்து செய்யப்படும். அவர் எந்த சூழ்நிலையிலும் சேர்க்கைக்கான உரிமையை கோரமுடியாது.

   During the verification of the original certificates, if the information furnished is found to be incorrect, the admission will be cancelled, even if the candidate is found eligible for provisional selection. The candidate shall have no claim, whatsoever, on the admission in such circumstances.

## 13.2 OMR படிவம் பூர்த்தி செய்யும் போது கவனிக்க வேண்டியவை

OMR படிவத்தை கீழ்க்கண்ட குறிப்புகளை கவனமாகப் படித்து அதன்படி பூர்த்தி செய்யவும். மாதிரி OMRபடிவம் **இணைப்பு** உள்ளது.

Read the following instructions carefully before filling the OMR Coding Sheet given along with the Prospectus.

1. விளக்கக் கையேட்டிலுள்ள எண்ணும் OMR படிவத்திலுள்ள எண்ணும் ஒன்று என உறுதிசெய்க.

   Ensure that the Prospectus Number and the OMR Coding Sheet Number given are the same.

2. OMR படிவத்திலுள்ள 20 கட்டங்களையும் விண்ணப்பதாரர் பூர்த்தி செய்ய வேண்டும்.
   There are <u>Twenty items</u> in the OMR Coding Sheet to be filled by the candidate.

3. OMR படிவத்தை குறியீடு 1லிருந்து கவனமாகப் பூர்த்தி செய்யவும்.
   Fill the OMR Coding Sheet from item No.1 onwards.

4. OMR படிவத்தை கருப்பு நிற பந்து முனைப் பேனாவால் பெரிய எழுத்தில் திருத்தமில்லாமல் பூர்த்தி செய்யவும்.

   Fill the OMR Coding Sheet in your own handwriting, clearly and legibly and in CAPITAL letters. Use black ball-point pen only for writing and shading. Do not overwrite.

5. OMR படிவம் OMR ஊடுருவியின் மூலம் செயல்முறைபடுத்தப்படுகிறது. அடைப்புகளை செவ்வக வடிவில் நிழலிடவும் [■■■]. அடைப்பினுள் வட்டம் [●], சரியென இடும் குறி [✓], பெருக்கல் குறி [✕], புள்ளி [.] போன்றவற்றை இடக்கூடாது.

   This form is to be processed on OMR Scanner. Shade the brackets as filled up here [■■■]. The shading should not go beyond the bracket. Do not encircle [●] or tick [✓] or cross [✕] or place a dot [.] within the bracket.

6. OMR படிவத்தைக் கவனமாக அனுப்பவும்.

   OMR sheet should be sent with due care.

7. OMR படிவத்தை வளைந்த கம்பி கொண்டு இணைத்தோ, சுருட்டியோ, விளிம்புகளை மடக்கியோ, கிழித்தோ, உருமாற்றியோ அனுப்பவேண்டாம். இவை உங்களது விண்ணப்பத்தைத் தள்ளுபடி செய்ய வழிவகுக்கும்.

   Do not staple, crumple, damage the edges, tear, spoil or otherwise disfigure this form, and this may lead to rejection of your application.

1 முதல் 20 வரை பூர்த்தி செய்ய கவனிக்க வேண்டியவை.

**Instructions to fill the items 1 to 20 carefully.**

1. **விண்ணப்பதாரரின் பெயர்**

தங்களது பெயரை எஸ்.எஸ். எல்.சி/மெட்ரிக் சான்றிதழின் முதல் பக்கத்திலுள்ளபடி, பெரிய எழுத்தில் அதற்கெனக் கொடுக்கப்பட்ட சதுர வடிவக் கட்டங்களில் எழுதவும். பெயரின் எழுத்துக்களைக் கொடுக்கப்பட்ட அடைப்புக் குறியினுள் [ ] நிழலிட வும். தந்தை பெயரின் முதல் எழுத்தைப் பெயரின் பின்னால் எழுதி நிழலிடவும். முதல் கட்டத்திலிருந்தே எழுத ஆரம்பிக்கவும். டாக்டர் / திரு. / திருமதி / செல்வி போன்ற வார்த்தைகளை எழுதக்கூடாது. உங்கள் பெயருக்கும், உங்கள் தகப்பனார் பெயரின் முதல் எழுத்துக்குமிடையே ஒரு புள்ளி வைக்கவும்.

Write your name in CAPITAL letters as given in your SSLC/Matriculation Certificate in the boxes provided and shade the corresponding alphabet given in the bracket [ ]. Start from the first box itself. **Do not write Dr. / Mr. / Ms. / Mrs. etc. Put the dot in the box between your name and your initial.**

2. **விண்ணப்ப எண்**

விண்ணப்ப எண் உங்களது விண்ணப்பப் படிவத்தில் பட்டைக்குறி முறையைப் பயன்படுத்தி அச்சிடப்பட்டுள்ளது.

Application Number in your Application is printed in the Bar Coding System.

3. **நுழைவுத் தேர்வு மையம்**

சரியான தேர்வு மையத்தைத் தேர்ந்தெடுத்து கொடுக்கப்பட்ட அடைப்புக்குறியினுள் [ ] நிழலிடவும். தங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தேர்வு மையத்தை எக்காரணம் கொண்டும் மாற்ற இயலாது. ஏதாவது காரணங்களுக்காக, விளக்கக்கையேட்டில் கொடுக்கப்பட்டுள்ள எந்த தேர்வு மையத்தையும் மாற்றுவதற்கோ அல்லது நீக்குவதற்கோ பல்கலைக்கழகத்திற்கு முழு அதிகாரம் உண்டு.

Make your choice of Examination Centre and shade the corresponding bracket [ ]. **Examination centre once selected cannot be changed. For any reasons, the University reserves the right to change or cancel any Examination Centre listed in the prospectus.**

4. **பயிற்று மொழி**

பி.எட். சிறப்புக் கல்வி தமிழ் அல்லது ஆங்கில பயிற்று மொழி சேர்க்கைக்கு தங்கள் விருப்பத்திற்கேற்ப ஏதேனும் ஒன்றினை மட்டும் தேர்வு செய்து நிழலிடவும். தாங்கள் அவ்வாறு ஏதேனும் ஒரு பயிற்றுமொழியை நிழலிடாமல் விட்டால், தங்களது விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

Make your choice of your Medium of Instruction and shade only one medium in the corresponding bracket [ ]. If the medium of instruction is not shaded, your application will be rejected.

5. பிறந்த தேதி

பிறந்த தேதியை அதற்கெனக் கொடுக்கப்பட்ட கட்டங்களில் எழுதி, கொடுக்கப்பட்ட அடைப்பு குறியினுள் [ ] பொருத்தமான எண்களில் நிழலிடவும்.

Write your Date of Birth in the boxes provided and shade the corresponding numeral given in the bracket [ ].

6. பாலினம்

சரியான பாலினத்தை கொடுக்கப்பட்ட அடைப்புக் குறியினுள் [ ] நிழலிடவும்.

Shade the appropriate bracket [ ] against your corresponding Gender.

7. சாதி

தங்களது சாதிக்குரிய இடத்தில் கொடுக்கப்பட்ட அடைப்புக் குறியினுள் [ ] நிழலிடவும். அவ்வாறு நிழலிடத் தவறினால், நீங்கள் இதர வகுப்பினராகக் (OC) கருதப்படுவீர்கள்.

Shade the appropriate bracket [ ] against your corresponding Community. If you fail to shade the community, you will be considered as OC.

8. சிறப்புப் பிரிவினர்

உடல் ஊனமுற்றோர், பார்வையற்றோர் அல்லது முன்னாள் இராணுவத்தினராயிருப்பின் அதற்குரிய இடத்தில் கொடுக்கப்பட்ட அடைப்புக் குறியினுள் [ ] நிழலிடவும்.

Shade the appropriate bracket [ ] against your corresponding Special Category - Physically Handicapped, Blind or Ex-servicemen.

9. முகவரி

உங்களது பெயர், தகவல் தொடர்பிற்கான முகவரி, அஞ்சல் குறியீட்டு எண் மற்றும் தொலைபேசி எண்ணை பெரிய எழுத்தால் அதற்கெனத் தரப்பட்டுள்ள இடத்தில் கறுப்புபந்து முனைப் பேனாவால் தெளிவாக எழுதவும். விண்ணப்பத்தாரரின் முகவரியை கட்டாயம் மாற்ற இயலாது.

Write your name and mailing address in CAPITAL letters with pin code in the space provided for this purpose. Use a Black Ball point pen for writing the address clearly. **The change of Address is not allowed.**

10. நிழல் படம்

விண்ணப்படிவத்தில் 4 x 5 செ.மீ. அளவுள்ள தங்கள் வண்ண நிழல் படத்தை ஒட்டவும். இந்த நிழல் டத்தில் சான்றொப்பம் பெறவேண்டாம். வளைந்த கம்பிக் கொண்டு நிழல் படத்தை இணைக்க வேண்டாம்.

Paste firmly your recent colour photograph with 4cm x 5cm size in the original OMR coding sheet. Do **not** get this photograph attested. Do not staple it.

11. உங்கள் கையொப்பத்தை கொடுக்கப்பட்டுள்ள கட்டத்தினுள் இடவும்.

Put your signature within the box provided.

12. கல்வித் தகுதி

நீங்கள் பெற்றிருக்கக் கூடிய தகுதிப் பட்டத்தினை பொருத்தமான அடைப்புக் குறியினுள் [ ] நிழலிடவும். குறிப்பிடப்படாத பட்டம் இருப்பின், **'Others'** என்று குறிப்பிட்ட இடத்தில் தங்கள் பட்டத்தை எழுதி, அதன் அடைப்புக் குறியினை நிழலிடவும்.

**Shade a bracket relevant to your qualifying degree. If you possess any degree not listed, write your degree in the space of 'Others' and shade the bracket.**

13. இளநிலை / முதுநிலை மதிப்பெண் சதவீதம்

இளநிலைப் பட்ட பாடங்களுக்கு பகுதி III இன் மதிப்பெண் சதவீதம் மட்டும் கணக்கிடப்பட வேண்டும். பகுதி I,II மதிப்பெண்களை கணக்கில் எடுத்துக் கொள்ளக் கூடாது (தமிழ் இலக்கியம் நீங்கலாக). விண்ணப்பதாரர் முதுநிலைப் பட்டம் பெற்றிருப்பின் இளநிலை மற்றும் முதுநிலைப் பட்டப்படிப்பில் பெற்ற மதிப்பெண் சதவீதத்தை தனித்தனியாக, அதற்கெனக் கொடுக்கப்பட்ட இரு கட்டங்களிலும் எண்களால் எழுதி அதற்குரிய அடைப்புக் குறியினுள் [ ] நிழலிடவும். மதிப்பெண் சதவீதத்தில் முழு எண்களை முதல் இரு கட்டங்களிலும் இரு தசம இடத்திருத்தத்தை இரண்டாவது இரு கட்டங்களிலும் எழுதி நிழலிடவும்.

Average percentage of marks of III part in UG degree (except B.Lit. Tamil) should be calculated and shaded in the appropriate bracket. Candidates who possess PG degree should write the percentage of their UG as well as PG degree marks and shade the corresponding numerals in the brackets [ ]. In the boxes whole numbers are to be written in first 2 digits and fraction numbers in the second 2 digits.

14. ஆசிரியர் பணி அனுபவம்

தங்களுக்கு ஆசிரியர் பணி அனுபவம் இருப்பின், தங்களது நிறைவு பெற்ற பணி அனுபவத்தைக் கொடுக்கப்பட்ட கட்டத்தினுள் எழுதி கொடுக்கப்பட்ட அடைப்பு குறியினுள் [ ] நிழலிடவும்.

Write your completed years of teaching experience, if you have teaching experience only in the box provided and shade the corresponding numeral in the bracket [ ].

15. பணிபுரியும் பள்ளியின் வகை

தற்போது தாங்கள் பணிபுரியும் பள்ளியின் வகையினை கொடுக்கப்பட்ட அடைப்புக் குறியினுள் [ ] சரியாக நிழலிடவும். இடைநிலைப் பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்கள் உயர்நிலைப் பள்ளி என்ற இடத்திற்கு எதிராக நிழலிடவும்.

Indicate your present employment (Type of School) by shading the appropriate bracket [ ]. Teachers working in Middle schools must shade the bracket given against 'Secondary'.

16. முதன்மை பாடத்தைத் தேர்வு செய்யவும்

கொடுக்கப்பட்டுள்ள மூன்று சிறப்பு பாடங்களில் உங்களது முதல் (முன்னுரிமை) தேர்வை அடைப்பில் நிழலிடவும். மேலும், கோடிட்ட இடத்தில் மூன்று பாடத் தேர்வையும் முன்னுரிமையடிப்படையில் எழுத்தால் எழுதவும்.

**Select Specialisation:** Shade the appropriate bracket against your area of specialisation. Then write your choice of priority of selection of specialisation in the lines provided.

17. தாங்கள் ஊனமுற்ற குழந்தையின் பெற்றோராய் இருப்பின் 'ஆம்' என்ற அடைப்பை நிழலிடவும். இல்லையெனில் 'இல்லை' என்ற அடைப்பை நிழலிடவும்.

Shade the bracket 'Yes' if you are a parent of a child with disability, if not shade the bracket 'No'.

18. நீங்கள் ஊனமுற்றவராக இருப்பின் 'ஆம்' என்ற அடைப்பை நிழலிடவும். இல்லையெனில் 'இல்லை' என்ற அடைப்பை நிழலிடவும்.

Shade the bracket 'Yes' if you are a person with disability, if not shade the bracket 'No'.

19. நீங்கள் இந்திய மறுவாழ்வுக்கழகம் வழங்கிய பதிவுச் சான்றிதழ் பெற்றிருப்பின் 'ஆம்' என்ற அடைப்பை நிழலிடவும். இல்லையெனில் 'இல்லை' என்ற அடைப்பை நிழலிடவும்.

Shade the bracket 'Yes' if you possess RCI Registration Certificate, if not shade the bracket 'No'.

20. உறுதி மொழி

உறுதி மொழியைப் படித்தபின் தங்களது முழு கையொப்பத்தை கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் இடவும். இடம் மற்றும் தேதியை குறிப்பிடவும்.

Put your full signature in the space provided for this purpose after reading the declaration. Write Place and Date.

## 14 முக்கிய விதிமுறைகள்

1. **விண்ணப்பங்கள்:** நுழைவுத் தேர்வு விண்ணப்பங்கள் பல்கலைக்கழகத்திற்கு மட்டுமே அனுப்பப்பட வேண்டும்.

   Filled in applications should be sent to the University only.

2. **சாதி:** சாதி குறிப்பிடப்படவில்லையெனில் விண்ணப்பம் இதர வகுப்புப்பிரிவினருக்கான (OC) இடஒதுக்கீட்டின் கீழ் எடுத்துக் கொள்ளப்படும்.

   If community is not mentioned, your application will be considered under OC category.

3. **முகவரி:** விண்ணப்பத்தாரரின் முகவரியை எக்காரணம் கொண்டும் பி.எட் சிறப்புக் கல்வி சேர்க்கை முடியும் வரை மாற்ற இயலாது.

The change of address is not permited until the admission process of B.Ed. SE is over.

4. **தேர்வு மையம்:** தேர்வு மையத்தை எக்காரணம் கொண்டும் மாற்ற இயலாது. ஏதாவது காரணங்களுக்காக, விளக்கக் கையேட்டில் கொடுக்கப்பட்டுள்ள எந்த தேர்வு மையத்தையும் மாற்றுவதற்கோ அல்லது நீக்குவதற்கோ பல்கலைக்கழகத்திற்கு முழு அதிகாரம் உண்டு.

Examination centre once selected cannot be changed for any reason. The University reserves the full right to change or cancel any Examination Centre given in the prospectus.

5. **நுழைவுச் சீட்டு:** நுழைவுத் தேர்வு நடைபெறும் தேதிக்கு ஒரு வாரத்திற்கு முன்பு, தகுதியுள்ளவர்களுக்கு 'நுழைவுச் சீட்டு' விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

The Hall Ticket will be sent by post to the address mentioned in the application one week before commencement of Entrance Examination.

6. **நகல் நுழைவுச் சீட்டு:** நுழைவுச் சீட்டு கிடைக்கப்பெறாதவர்கள் அவர்களுக்குரிய நுழைவுத் தேர்வு ஒருங்கிணைப்பு மையத்திற்கு நுழைவுத் தேர்வு நடைபெறும் தேதிக்கு முன்தினத்தில் நேரடியாகச் சென்று, பி.எட். சிறப்புக் கல்வி விண்ணப்பம் செய்ததற்கான ஆதாரத்தையும், இரண்டு புகைப்படங்களையும் கொண்டு சென்று 'நகல் நுழைவுச் சீட்டு' பெற்றுக் கொள்ளலாம்.

Those who have not received the Hall ticket can receive the duplicate Hall ticket from the respective coordinating centres on the previous day of the Entrance Examination by producing proof for the despatch of the application and two passport colour photograph.

7. ஏதாவது காரணங்களுக்காக தெரிந்தெடுக்கப்பட்ட கல்வி மையங்கள் செயல்படவில்லை எனில், மாணவர்களை பிற கல்வி மையங்களுக்கு மாற்ற பல்கலைக்கழகத்திற்கு உரிமை உண்டு.

If for any reason, the identified Programme Study Centre is cancelled, then the University has got the right to shift the students to a suitable **Programme Study Centre.**

8. பிற மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் பி.எட். சிறப்புக் கல்வி படிப்புகளுக்கு விண்ணப்பிக்க இயலாது.

Other State candidates are not eligible for applying to B.Ed. Special Education.

9. விண்ணப்பதாரர் பி.எட். சிறப்புக் கல்வி நுழைவுத் தேர்வு எழுதவும், பயிலவும் ஏதேனும் ஒரு பயிற்று மொழியை அதாவது, தமிழ் அல்லது ஆங்கிலம் ஆகியவற்றில் ஒன்றை தேர்ந்தெடுக்க வேண்டும்.

Candidate has to select any one medium of instruction either Tamil or English for his / her B.Ed. SE Entrance Examination and Degree of Study.

# இணைப்பு - I

## பி.எட். சிறப்புக் கல்வி மையங்கள் மற்றும் குறியீட்டு எண்கள்

## B.Ed. (SE) Programme Study Centres and Code Numbers

| குறியீட்டு எண் | கல்வி மையத்தின் பெயர்& முகவரி | பயிற்றுவிக்கும் சிறப்புப் பாடம் | தொலைபேசி எண் |
|---|---|---|---|
| 51 | பால விஹார் பயிற்சிப் பள்ளி, ஹால்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம் தோட்டம், சென்னை-600 010.<br>**Bala Vihar Training School,** Halls Road, Kilpauk Garden, Chennai - 600 010. | மனவளர்ச்சிக் குன்றியமை<br>**Mental Retardation** | தொலைபேசி: 044 - 26475588 |
| 52 | டாக்டர் எம்.ஜி.ஆர். வாய் பேசாதோர் மற்றும் காது கேளாதோர் பள்ளி, ராமாவரம், எம்.ஜி.ஆர். தோட்டம், நந்தம்பாக்கம், சென்னை - 600 089.<br>**Dr. M.G.R. School for the Speech and Hearing Impaired,** Ramavaram, MGR Gardens, Nandambakkam, Chennai - 600 089. | கேட்கும் திறன் குறைபாடு<br>**Hearing Impairment** | தொலைபேசி: 044 - 22490629<br>044 - 22490562 |
| 53 | **கிளர்க் காது கேளாதோர் மற்றும் மன வளர்ச்சி குன்றியோர் பள்ளி,** 'சாதனா', எண்.3, 3-ம் தெரு, டாக்டர். ராதாகிருஷ்ணன் சாலை, மைலாப்பூர், சென்னை-600 004.<br>**The Clarke School for the Deaf and the Mentally Retarded,** Sadhana, No.3, 3rd Street, Dr. Radhakrishnan Road, Mylapore, Chennai - 600 004. | கேட்கும் திறன் குறைபாடு<br>**Hearing Impairment** | தொலைபேசி: 044 - 28475424<br>044 - 28475910 |
| 54 | விஜய் ஹியூமன் சர்வீசஸ், 5/507, சுப்பிரமணியன் சாலை, வெங்கடேசபுரம், கொட்டிவாக்கம், சென்னை-600 041.<br>**Vijay Human Services,** 5/507, Subramanian Salai, Venkatesapuram, Kottivakkam, Chennai - 600 041. | மனவளர்ச்சிக் குன்றியமை<br>**Mental Retardation** | தொலைபேசி: 044 - 24481748 |
| 57 | **இந்திரா காந்தி சிறப்புக் கல்வியியல் கல்லூரி,** ஹோலி கிராஸ் வளாகம், கணுவாய், தடாகம் சாலை, கோயம்புத்தூர்-641 108.<br>**Indra Gandhi College of Special Education,** Holy Cross Campus, Kanuvai, Thadagam Road, Coimbatore - 641 108 | மனவளர்ச்சிக் குன்றியமை<br>**Mental Retardation** | தொலைபேசி: 0422 - 2658442<br>0422 - 2658446 |
| 58 | **எஸ்.பி.டி.சிறப்பு கல்வியியல் கல்லூரி,** அன்பகம் விரிவு, டி.ஆர்.ஓ. காலனி, கோ. புதூர், மதுரை-625 007.<br>**S.B.T. College of Special Education,** Anbagam Extn, DRO Colony, K. Pudur, Madurai-625 007. | மனவளர்ச்சிக் குன்றியமை<br>**Mental Retardation** | தொலைபேசி: 0452 - 2539040 |

| குறியீட்டு எண் | கல்வி மையத்தின் பெயர்& முகவரி | பயிற்றுவிக்கும் சிறப்புப் பாடம் | தொலைபேசி எண் |
|---|---|---|---|
| 59 | **எஸ்.பி.டி.சிறப்பு கல்வியியல் கல்லூரி,** அன்பகம் விரிவு, டி.ஆர்.ஓ. காலனி, கோ. புதூர், மதுரை-625 007. **S.B.T. College of Special Education,** Anbagam Extn, DRO Colony, K. Pudur, Madurai-625 007. | கண்பார்வைக் குறைபாடு **Visual Impairment** | தொலைபேசி: 0452 - 2539040 |
| 60 | **ஹோலிகிராஸ் கல்லூரி,** மறுவாழ்வு அறிவியல் துறை, தெப்பக்குளம் அஞ்சல், திருச்சிராப்பள்ளி -620 002. **Holy Cross College,** Department of Rehabilitation Science, Theppakulam, Tirchy - 620 002. | மனவளர்ச்சிக் குன்றியமை **Mental Retardation** | தொலைபேசி: 0431 - 2704343 0431 - 2704330 |
| 61 | **வித்யா விகாசினி பயிற்சி மையம்,** 66 - D மேட்டுப்பாளையம் சாலை, துடியலூர் அஞ்சல், கோயம்புத்தூர் - 641 034. **Vidya Vikasini Training Centre,** 66 - D, Mettupalayam Road, Thudiyalur Post, Coimbatore - 641 034. | மனவளர்ச்சிக் குன்றியமை **Mental Retardation** | தொலைபேசி: 0422 - 2649819 0422 - 2642396 |

# இணைப்பு - II

## நுழைவுத் தேர்வு மையங்கள்

## B.Ed. SE Entrance Examination Centres

| | | |
|---|---|---|
| 1. | சென்னை | (Chennai) |
| 2. | கோவை | (Coimbatore) |
| 3. | மதுரை | (Madurai) |
| 4. | சேலம் | (Salem) |
| 5. | திருநெல்வேலி | (Tirunelveli) |
| 6. | திருச்சி | (Trichy) |
| 7. | வேலூர் | (Vellore) |
| 8. | விழுப்புரம் | (Villupuram) |